# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் செய்தி மடல்

செய்தி 19 மடல் 6 ஜூன் 2019 ₹1.00

### தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

- உடல் நலக் கல்வியைக் கவனப்படுத்தும் முக்கியத் துறைகளில் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சித் திட்டங்களை ஒன்றிணைந்து செயல்படுத்தும் வகையில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கும் சென்னைப் போரூர், ஸ்ரீராமச்சந்திரா உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கும் இடையே ஐந்து ஆண்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 15.05.2019 அன்று செய்து கொள்ளப்பட்டது. கால்நடை



வளங்கள்மூலம் டயாலிசிஸ் சவ்வு உருவாக்குதல், உயிரி அடையாளங்காட்டிகளை மதிப்பிடல், மருத்துவ உயிர் மூலக்கூறுகள், உணவுசார் மருந்துகள், சுற்றுச்சூழலுக்கு உகந்த புதிய நானோ தொழில்நுட்ப அடிப்படையில் மருந்துகள் மற்றும் மருந்து வழங்கல் முறை ஆகியவற்றுக்கு இவ்வொப்பந்தம் வழிவகுக்கும். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலச்சந்திரன் அவர்கள் முன்னிலையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ், ஸ்ரீராமச்சந்திரா உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையப் பதிவாளர் திரு. வி.சுவாமிநாதன் ஆகியோர் கையொப்பம் இட்டனர். இந்நிகழ்வில் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் உடனிருந்தார்.

- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்திற்கும் கே.ஜெ. ஆராய்ச்சி அறக்கட்டளைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் 25.04.2019 அன்று கையெழுத்தாயிற்று. நோய் எதிர்ப்பு தானாகவே நிலைகுலைதலில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, ஆதாரச் செல் ஆராய்ச்சி, நீரிழிவு நோய், முடக்குவாதம், எலும்புத்துளை நோய்களுக்கு மூலிகைசார் மருத்துவம், பன்றிகளில் மாதிரிப் பரிசோதனைகள், உயிர்த் தொழில்நுட்பத்தில் முனைவர் பட்டம் மற்றும் முதுமுனைவர் பட்ட ஆய்வு, இரு தரப்பிலும் ஆசிரியர் பரிமாற்றம் ஆகியவற்றைச் செயல்படுத்தும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் உயிர்த் தொழில்நுட்பத்தில் ஆய்வியல் நிறைஞர் (எம்ஃபில்) பட்டம் மேற்கொள்ளும் மாணவர் ஒருவருக்கு கே.ஜெ.ஆராய்ச்சி அறக்கட்டளை ஆய்வுத்தொகையாக ரூபாய் 5,000/– அளிக்கும். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலச்சந்திரன் அவர்கள் முன்னிலையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா.டென்சிங் ஞானராஜ், கே.ஜெ. ஆராய்ச்சி அறக்கட்டளையின் இயக்குநர் மற்றும் நிறுவனர் மருத்துவர் கே. ஜெகதீசன் ஆகியோர் கையொப்பம் இட்டனர். இந்நிகழ்வில் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் உடனிருந்தார்.

- ஆதாரச் செல் ஆராய்ச்சியில் ஒன்றிணைந்து ஆராய்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கும் சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கும் இடையே 03.06.2019 அன்று கையெழுத்தாயிற்று. 10 ஆண்டுகளுக்குச் செய்து கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் இரு தரப்பிலும் அறிவுப் பகிர்வு, புத்தாக்க மருத்துவம் மற்றும் உயிர்த் தொழில்நுட்பத்தில் அடிப்படை மற்றும் பயன்பாட்டு ஆய்வு தொடர்பான பயிற்சி அளித்தல் ஆகியவற்றை முன்னெடுக்கும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா.டென்சிங் ஞானராஜ், அரசு ஸ்டான்லி மருத்துவமனை முதல்வர் மருத்துவர் எஸ். பொன்னம்பல நமசிவாயம் ஆகியோர் கையொப்பமிட்டனர்.

### கால்நடை அறிவியல் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பில் புதிய நிறுவனங்கள் இணைப்பு



பல்கலைக்கழகத்தின் பிரிவு 8 நிறுவனமான கால்நடை அறிவியல் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பில் இரு துவக்கநிலை நிறுவனங்களை இணைப்பதற்கான ஒப்பந்தம் 17.05.2019 அன்று கையெழுத்தாயிற்று. இதற்கான நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலச்சந்திரன், பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா.டென்சிங் ஞானராஜ், கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஜி.தினகர் ராஜ் ஆகியோர் பங்கேற்றனர். சென்னை, ஜெஷ்ரான் பயோடெக் சொல்லுயூஷன் தனியார் நிறுவனம் காயத்தை ஆற்றுவதற்கான ஸ்மார்ட் கட்டுதுணியையும், நானோ உயிர்பாலிமர் அடிப்படையிலான இறைச்சிப் பையகப்படுத்தும் கருவியையும் உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. பெங்களூரு, இல்லுமி ஜீன் இந்தியா எல்எல்பி நிறுவனம் கால்நடை நோய்களை அடையாளங்காண என்ஜிஎஸ் அடிப்படையில் மரபணுக் கோர்வைப் பரிசோதித்தல் பணியையும்,

பாலிமரேஸ் தொடர் வினை அடிப்படையில் கருவிகலப் பெட்டி உருவாக்கல் பணியையும் செய்யும்.

### பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பங்கேற்பு

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள், 09.05.2019 மற்றும் 10.05.2019ஆம் தேதிகளில் பந்த்நகர், ஜி.பி. பந்த் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற "வேளாண்மைப் பல்கலைக்கழகங்களின் நிர்வாக முறைகள்: மாற்றத்திற்கான உந்துசக்திகளும் சவால்களும்" எனும் 8ஆவது அனைத்திந்திய வேளாண் பல்கலைக்கழகங்களின் பயிலரங்கில் பங்கேற்று, "இந்திய வேளாண் பல்கலைக்கழகங்கள்: புதிய கற்பித்தல் சூழலை உருவாக்குதல்" என்பது குறித்துக் கலந்துரையாடினார்.

### புறநிலை நிதியுதவித் திட்டங்கள் ஆய்வு

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலசந்திரன் அவர்கள் நாமக்கல், ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களிலும் நாமக்கல், வேளாண் அறிவியல் நிலையத்திலும் செயல்பட்டு வரும் புறநிலை நிதியுதவித் திட்டங்களை 03.05.2019அன்று நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் பா.மோகன் ஆகியோர் உடனிருந்தனர்.

### கால்நடை மருத்துவர்களுக்குப் பயிலரங்கு

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறைமூலம் கால்நடை மருத்துவர்களின் நலன் கருதி, "பெரிய அசைபோடும் பிராணிகளில் வாய்வழி நீரேற்றம் மற்றும் இரத்த நாளங்கள்வழி விரைவான திரவச் சிகிச்சை அளித்தல்" பற்றிய பயிலரங்கு 31.05.2019அன்று நடத்தப்பட்டது. இதில் 50 கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றனர். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் மற்றும் தலைவர் (ஓய்வு) முனைவர் சே. பிரதாபன் அவர்கள் சிறப்பு விரிவுரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கோ. விஜயகுமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

### பண்ணையாளர் பயிற்சி

கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் "ஆடு வளர்ப்பில் புதிய தொழில்நுட்பங்கள்" எனும் கட்டணப் பயிற்சி 13.05.2019 மற்றும் 14.05.2019ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. பயிற்சியில் மொத்தம் 15 பண்ணையாளர்கள் பங்கேற்றனர்.

### உலகச் சுற்றுச்சூழல் நாள்



மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 04.06.2019அன்று உலகச் சுற்றுச்சூழல் நாள்–2019 கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியைக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் துவக்கிவைத்தார். நிகழ்ச்சியை முன்னிட்டு நெகிழி (பிளாஸ்டிக்) குப்பைகளை அகற்றுதல் மற்றும் மரக் கன்று நடுதல் செயல்படுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் கல்லூரியின் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்று 315 மரக் கன்றுகளை நட்டனர்.

### விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

- உலகச் சுகாதார அமைப்பானது கைகளைத் தூய்மையாக வைத்திருத்தல் நாளாக மே 5ஆம் தேதியைக் அறிவித்து, அனைவருக்கும் சிறந்த உடல் ஆரோக்கியம் மற்றும் மேலான உடல்நலப் பாதுகாப்பு கிடைக்கும் வகையில், உலகச் சுகாதாரப் பாதுகாப்பு அமைய வேண்டும் என அனைவரையும் கேட்டுக்கொண்டது. இதன் பொருட்டு ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் சுகாதாரப் பிரிவின் மூலம் கல்லூரியின் சுகாதாரப் பணியாளர்களுக்கு "உங்கள் நலன் உங்கள் கைகளில்" எனும் பொருளில் கைகளின் தூய்மை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி 10.05.2019அன்று நடத்தப்பட்டது.
- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பாதுகாப்புப் பிரிவு மூலம் "கோடைக்காலங்களில் ஏற்படும் தீ விபத்துக்களைத் தடுத்தல்" குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி 14.05.2019அன்று நடத்தப்பட்டது. நிகழ்ச்சியைக்



கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் துவக்கிவைத்தார். நிகழ்ச்சியில் தலைமைப் பாதுகாப்பாளர் திரு. அ. தனபால் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்கள் பல்வேறு விதமான தீயணைப்பான் கருவிகளை இயக்குதல் மற்றும் தீத் தடுப்பு குறித்து விளக்கிக் கூறினர்.

### நாமக்கல், வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு விருதுகள்




இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் மண்டலம் 10இன் கீழ் இயங்கிவரும் வேளாண் அறிவியல் நிலையங்களுக்கான ஆண்டு ஆய்வுக் கூட்டத்தின் துவக்க அமர்வு 24.05.2019அன்று ஐதராபாத், தேசிய வேளாண் ஆராய்ச்சி மற்றும் மேலாண்மை நிறுவனத்தில் நடைபெற்றது. இதில் நிக்ரா திட்டத்திற்கான (2018–19) சிறந்த விருது, நாமக்கல், வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் வேளாண் விரிவாக்கத் துணைத் தலைமை இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டது. மேலும், 26.05.2019அன்று நடைபெற்ற கூட்டத்தின் முதன்மை அமர்வில் சிறந்த முறையில் வாய்மொழி உரை மற்றும் சுவரிதழ் உரை சமர்ப்பித்தலுக்கான இரு விருதுகள் நாமக்கல், வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு அளிக்கப்பட்டன.

## மாட்டினப் பராமரிப்பாளர்க்கு அங்கீகாரம்




நீடித்த வேளாண் மற்றும் சுற்றுச்சூழல் தன்னார்வத் திட்டம் மற்றும் தேசியக் கால்நடை மரபுவள ஆதார அமைப்புமூலம் கர்னால், தேசியக் கால்நடை மரபுவள ஆதார அமைப்பில் 21.05.2019 மற்றும் 22.05.2019ஆம் தேதிகளில் நடைபெற்ற விருது அளிப்பு மற்றும் பயிலரங்கில் தருமபுரி மாவட்டம், பெரியூரைச் சேர்ந்த திரு. ஆர். தேவராஜ், த/பெ திரு. ராஜிநாயுடு – ஆலம்பாடி மாட்டின மந்தைப் பராமரிப்பாளர்க்கு "இன மீட்பு விருது" அளித்துச் சிறப்பிக்கப்பட்டது. அந்த வகையில் மாட்டினப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட தருமபுரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்குப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

## பருவ மழை – 2019 குறித்துப் பத்திரிக்கை மற்றும் ஊடகப் பிரதிநிதிகளுடன் சந்திப்பு

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு மற்றும் தர உறுதி ஆய்வகத்தில் இயங்கிவரும் வேளாண் வானிலை ஆலோசனை மையத்தில் தென்மேற்குப் பருவமழை – 2019 குறித்துப் பத்திரிக்கை மற்றும் ஊடகப் பிரதிநிதிகளுடன் சந்திப்பு நிகழ்ச்சி 30.05.2019 அன்று நடைபெற்றது. சந்திப்பில் கால்நடை மற்றும் கோழிகளில் பருவ மாற்றத்தால் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து எழுப்பிய கேள்விகளுக்கு உரிய பேராசிரியர்களால் பதில் அளிக்கப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் கல்லூரியின் பல்வேறு பணிகளையும் விவசாயிகள் மற்றும் செல்லப்பிராணி வளர்ப்போரின் நன்மை கருதிக் கல்லூரியில் அளிக்கப்படும் சேவைகளையும் விரிவாக எடுத்துரைத்தார்.

## பல்கலைக்கழக முதன்மை மட்டைப்பந்துப் போட்டி–2019

பல்கலைக்கழக முதன்மை மட்டைப்பந்துப் போட்டி–2019; மூன்றாவது டி20 பகல் இரவு மட்டைப்பந்துப் போட்டி, திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 16.05.2019 முதல் 19.05.2019 வரை நடைபெற்றது. பல்கலைக்கழக முதன்மை மட்டைப்பந்துப் போட்டியைப் பல்கலைக்கழக மேலாண்மைக் குழு உறுப்பினர் மருத்துவர் எம். சுந்தரலிங்கம், பல்கலைக்கழக மருத்துவமனை நிர்வாகக் குழு உறுப்பினர் திரு. ரேமண்ட் பெட்ரிக் ஆகியோர் 16.05.2019அன்று துவக்கிவைத்தனர். இந்நிகழ்ச்சிக்குத் திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர்(பொ.) முனைவர் ஜெ. ஜாண்சன் ராஜேஸ்வர் அவர்கள் தலைமை வகித்தார். போட்டியில் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளான சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி; திருநெல்வேலி, ஒரத்தநாடு மற்றும் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், பல்கலைக்கழகக் கால்நடை உற்பத்திக் கல்வி மையப் பிரிவுகள், விரிவாக்கக் கல்வி மையம் மற்றும் கால்நடை நலக் கல்வி மையங்களின் பிரிவுகள் ஆகியவற்றைச் சார்ந்த ஆறு அணிகள் பங்கேற்றன. 19.05.2019அன்று நடைபெற்ற போட்டியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பங்கேற்றுத் தலைமையுரை ஆற்றிப் பரிசுகள் வழங்கினார். அவர் தமது உரையில் விளையாட்டு வீரர்களின் விளையாட்டுத்திறன், அவர்களின் உடற்தகுதி மற்றும் கூட்டு முயற்சி குறித்து வலியுறுத்தினார். கிருஷ்ணா மைன்ஸ் நிறுவனத்தின் நிர்வாகப் பொது மேலாளர் திரு. எஸ். ரவிசங்கர் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி அணி கோப்பையை வென்றது; திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய அணி இரண்டாம் இடம் பிடித்தது. தொடர் நாயகன் மற்றும் சிறந்த ஆல்ரவுண்டர் விருதைத் திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மருத்துவர் எம். பூபதிராஜா வென்றார். சிறந்த மட்டையாளர் விருது மற்றும் சிறந்த பந்து வீச்சாளர் விருதை முறையே



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த முனைவர் ஏ. சக்திவேல்செல்வன் மற்றும் முனைவர் ஓ.ஆர். சத்தியமூர்த்தி வென்றனர். நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த மருத்துவர் எஸ். உதயவேல், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த முனைவர் சி. ஸ்ரீகுமார் ஆகியோர் முறையே சிறந்த பீல்டராகவும், சிறந்த விக்கெட் கீப்பராகவும் தேர்வு செய்யப்பட்டனர். மட்டைப்பந்துப் போட்டியின் அமைப்புச் செயலாளர் முனைவர் எம். செல்லபாண்டியன் அவர்கள் விளையாட்டுப் போட்டி அறிக்கை அளித்தார். நிகழ்ச்சியின் இறுதியில் திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரியின் விளையாட்டுப் போட்டிச் செயலாளர் மருத்துவர் ஏ. சுந்தர் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

## நாட்டுநலப் பணித் திட்டம்

★ சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டப்பிரிவுமூலம் தத்தெடுக்கப்பட்ட சிவன்வாயல், பண்டிக்காவனூர், கரையான்மேடு மற்றும் கோயம்பாக்கம் கிராமங்களில் 01.05.2019 முதல் 07.05.2019 வரை கால்நடைச் சுகாதார முகாம் மற்றும் கால்நடை இனப்பெருக்க முகாம்கள்



நடத்தப்பட்டன. மனித உடல் பரிசோதனை மற்றும் கண் பரிசோதனை, மதிப்புக் கூட்டிய சிறுதானியப் பொருள்கள் தயாரிப்பு மற்றும் பால் பொருள்கள் தயாரிப்புப் பயிற்சி ஆகியவை செயல்படுத்தப்பட்டன. சென்னையில் உள்ள பிர்லா கோளரங்கத்துடன் இணைந்து புனப்பாக்கம் கிராமத்தில் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் பள்ளி மாணவர்களுக்குப் பல்வேறு கலாச்சார மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254**
**Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.**

**Licensed to post without prepayment No.TN/PMG(CCR)/WPP-708/2018-2020**
**REGISTERED No.TN/CC(S)DN/569/18-20**

Posted on 28.06.2019 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by Dr. K.N. Selvakumar, Director of Distance Education, Tamil Nadu Veterinary and Animal Sciences University, Old No. 327/New No. 485, Anna Salai, Nandanam, Chennai – 600035 on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University, Printed at University Printing Press, Mathur Road, Madhavaram Milk Colony, Chennai – 600051. Editor: Dr. K.N. Selvakumar, Ph.D.

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டு நலப்பணித் திட்டப் பிரிவுமூலம் தத்தெடுக்கப்பட்ட சின்னகரசபாளையம் கிராமத்தில் “இளைஞர்களால் தூய்மை” எனும் பொருளில் 27.04.2019 முதல் 03.05.2019 வரை சிறப்பு முகாம் நடைபெற்றது. முகாமில் 100 நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் சுற்றுச்சூழல் தூய்மைப்படுத்துதல், நீர்த் தொட்டிகளுக்கு வெள்ளை அடித்தல், கைப்பந்துத் திடலைச் சீர்செய்தல் போன்ற பல்வேறு நிகழ்வுகளில் ஆர்வமுடன் கலந்துகொண்டனர். சின்னகரசபாளையத்தின் குழந்தைகள் மற்றும் பெரியோர்களுக்குப் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர்கள் கால்நடை வளர்ப்பு பற்றி விரிவுரையாற்றி, மதிப்புக் கூட்டிய பால் மற்றும் இறைச்சிப் பொருள்கள் தயாரிப்பு தொடர்பான செயல்முறை விளக்கம் அளித்தனர். இதில் 250 பேர் பங்கேற்றுப் பயன்பெற்றனர். மேலும், 29.04.2019 அன்று நடத்தப்பட்ட பொது மருத்துவ முகாமில் 85 பேர் பங்கேற்றுப் பயனடைந்தனர். 02.05.2019 அன்று நடத்தப்பட்ட கால்நடை மருத்துவ முகாமில் 75 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

### பணி ஓய்வு



- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் உயிர்த்தகவல் நுட்ப மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கா. குமணன் அவர்கள் 31.05.2019 அன்று பணி ஓய்வு பெற்றார். 12.05.1959இல் பிறந்த இவர், 31 ஆண்டும் 10 மாதமும் பணியாற்றியுள்ளார்.



- ஈரோடு, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஆர். செல்வராஜ் அவர்கள் 31.05.2019 அன்று பணி ஓய்வு பெற்றார். 06.05.1959இல் பிறந்த இவர், 30 ஆண்டும் 10 மாதமும் பணியாற்றியுள்ளார்.



- பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தின் உதவி இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு. எஸ். பாஸ்கர் அவர்கள் 31.05.2019 அன்று பணி ஓய்வு பெற்றார். 15.05.1961இல் பிறந்த இவர், 26 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை நுண்ணுயிரியியல் துறைக் கண்காணிப்பாளர் திருமதி கே. நளினி அவர்கள் 31.05.2019 அன்று பணி ஓய்வு பெற்றார். 29.05.1961இல் பிறந்த இவர், 29 ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உயிர்த் தொழில்நுட்பத் துறையின் உடனாள் (முதுநிலை) திருமதி என். காவேரி அவர்கள் 31.05.2019 அன்று பணி ஓய்வு பெற்றார். 24.05.1959இல் பிறந்த இவர், 13 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.



- காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் உடனாள் திரு.கே.சுந்தரம் அவர்கள் 31.05.2019 அன்று பணி ஓய்வு பெற்றார். 04.05.1959இல் பிறந்த இவர், 30 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கல்விச் சிறப்புப் பிரிவின் உடனாள் திரு.டி.தனராஜ் அவர்கள் 31.05.2019 அன்று பணி ஓய்வு பெற்றார். 08.05.1961இல் பிறந்த இவர், 23 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



- பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் உடனாள் திரு. எஸ். அன்புமணி அவர்கள் 31.05.2019 அன்று பணி ஓய்வு பெற்றார். 12.05.1959இல் பிறந்த இவர், 13 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சி. பாலச்சந்திரன், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் க.ந. செல்வக்குமார்
தொலைநிலைக் கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் தி.வ. மீனாம்பிகை
முனைவர் சி. மணிவண்ணன்
முனைவர் த. செந்தில்குமார்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் பா. மதுகேஸ்வரன்
முனைவர் ம. தங்கபாண்டியன்
மருத்துவர் கா.தீ. கவிதா